*Copy of Deposition*

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்**

**அசல் வழக்கு எண். 113 /2024**

2025 ம் ஆண்டு **ஜனவரி மாதம் 10-ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1-ன்** வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தியாகராஜன் | ஜாதி | : | |
| த/பெ.பெயர் | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:-

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1)12.07.1916 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 01.11.1950 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.2 ஆகவும்,**

3) 15.02.1960 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.3**

**ஆகவும்,**

4) 26.07.1971 ம் தேதியிட்ட முதன்மை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.307/1971 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு **வா.த.சா.ஆ. 4 ஆகவும்,**

5) 23.08.1967 ம் தேதியிட்ட செட்டில்மென்ட் தாசில்தார் அவர்களின் உத்தரவு சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

6) ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றம் CMA.2/2012 மேல் முறையீட்டு மனுவில் மேல் முறையீட்டு குறிப்பாணை **வா.த.சா.ஆ. 6 ஆகவும்,**

7) ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்ற அ.வ.எண்.145/2006 வழக்கின் தீர்ப்பாணை **வா.த.சா.ஆ. 7 ஆகவும்,**

8) 05.10.1998 ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ. 8 ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sdxxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |